18

# சுயவிபரப் படிவம்

1) பெயர் :- எம். ஐ. அகமட்லெவ்வை

2) விலாசம் :- 149, சாலி வீதி,
சம்மாந்துறை -10

3) தொழில் :- ஆசிரியர்

4) பாடசாலை :- கமு/சது/முஸ்லிம் மத்திய மகாவித்தியா-லயம் (தேசியபாடசாலை) சம்மாந்துறை.

5) தொ. இ. அலுவலகம் :- 067 2260024

6) தொ. இ. தனிப்பட்ட :- 0776109090

7) போட்டிப் பிரிவு 4 :- நாடக கையெழுத்துப் பிரதி தயாரித்தல் போட்டி (4.2)

8) உறுதியுரை :- மேற்படி நாடகப்பிரதியானது தனது சுய முயற்சியினால் உருவாக்கப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

9) அதிபர் :-

Mrs. U.N.A. RAHEEM
Deputy Principal
STR/Sammanthurai Muslim M.M.V
(National School)
Sammanthurai

# நான் மாறினால் நாடு மாறும்.

பாத்திரங்கள் :- ஆசிரியர், மாணவர்கள்.

காட்சி - 01 வகுப்பறை.

⇒ மாணவர் வருகை.

⇒ ஆசிரியர் வருகை.

ஆசிரியர் :- வணக்கம் மாணவர்களே.

மாணவர்கள் :- வணக்கம் சேர்.

ஆசிரியர் :- நேற்று நாம் "நல்லாட்சிக்கான இலங்கை" என்ற பாடத்தை மிக அழகாகவும் தெளிவாகவும் கற்றோம், அதனால் உங்கள் அனைவரையும் வெளிக்களத் தகவல்கள் எடுத்துவரச் சொன்னேன் அல்லவா சரி இர்பான் நீங்க என்ன தகவல் கொண்டுவந்திருக்க?

இர்பான் :- சேர் நான் "நாய்" கதையொன்று எழுதியிருக்கன்.

ஆசிரியர் :- என்ன? நாய்க்கதையா?

இர்பான் :- ஆம் சேர் இறந்த நாயட கதை.

ஆசிரியர் :- எங்கே பார்போம்.

இர்பான் :- ஒரு நகரத்தில் காலையில் மக்கள் விழித்தெழுந்ததும் பிரதான வீதியின் மத்தியில் நாயொன்று இறந்து கிடப்பதை நகரில் வாழும் மக்கள் கண்டனர். இக் காட்சியைக் கண்ட மக்கள் ஆச்சரியமும் வெறுப்பும் கொண்டவர்களாக இத் தொல்லைதரும் இறந்த நாய் பற்றி தமது கருத்துக்களை பலவாறும் தெரிவிக்கலாயினர். என்றும் இதுபற்றிய விடயத்தில் அவர்கள் எந்த ஒரு நடவடிக்கையும் எடுப்பதில் அக்கறை காட்டவில்லை. அவர்கள் தமது வழமையான கடமைகளில் ஈடுபடலாயினர். சிலர் ஒருவருக்கு ஒருவர் வாக்குவாதத்திலும் ஈடுபடலாயினர். சிலர் வீண் அரட்டை அடித்துக் கொண்டு தமது கடமையில் ஈடுபடலாயினர்,

மாணவர்கள் :- ஆரவாரம் கொண்டு தமக்குள்ளே "நாய்கதை நல்ல தத்துவங்கள் போதித்திருக்கிறது போல....."

ஆசிரியர் :- அமைதி அமைதி இறந்த நாயால் சிறந்த சமூகம் உருவாகும் போல தெரியுது சரி எங்கே தொடருங்கள்.

கிர்பான் தொடரல் :- அந்த நகரவாசிகளுக்கு மத்தியில் தனது மீசை பற்றிய சதா கண்ணும் கருத்துமாக இருக்கும் பெலவன் எனும் திண்பண்ட வியாபாரியும், தனது முகச்சவரம் செய்யும் சிரேசர் பற்றிப் பெருமையுடன் பேசும் ஒரு பெண்ணாகிய அபாவுடன் வம்பளத்தில் வல்லவரான சுப்ப் எனும் நாவிதனும் தனது இடையைக் குறைத்துக் கொள்ள எப்பொழுதும் தேக அப்பியாசத்தில் ஈடுபடுகின்ற போதும் ஒழுக்கமான உலாவல் பழக்கங்களில் ஈடுபடும் அரச உத்தியோகத்தரான மாலக்கும், ஜிம்மன் எனும் சோம்பறியான துப்பரவுத் தொழிலாளியும் "நாய் பிரச்சினை" பற்றிப் பலவாறும் பேசி மேலும் கொடுப்பனவுகளையும் வரவுகளையும் சேர்த்துக் கொள்வதில் மும்முரமாக ஈடுபடும் மதத்தலைவர் ஒருவரும் சகல நீதியான, அநீதியான மார்க்கங்களில் இருந்தும் தனது அரசியல் ஆதாய நோக்கங்களை அடைவதில் கண்ணும் கருத்துமாக இருந்த அரசியல் தலைவரும் அவர்கள் மத்தியில் இருந்தனர். அவர்களுக்கு இடையே இந்த இறந்த நாய் காரணமாக ஒரு பைத்தியக் காரன் மாத்திரம் மிக்க மனவேதனை அடைகின்ற போதும் அவன் அனைவராலும் விமர்சிக்கப்படுகின்றார்.

அவர்கள் அனைவரும் இரவானதும் நித்திரைக்குச் சென்ற போதும் சகித்துக் கொள்ள முடியாத துர்வாடை காரணமாக நித்திரை வராத நிலையில் கண்விழித்துத் தவிக்கின்றனர். துர்வாடையைத் தவிர்ப்பதற்காக சந்தனக் குச்சிகளை பகிர்ந்தளித்து இங்கு அவ்வாறு துர்வாடை இல்லாதவாறு செய்து உங்கள் மூக்கு பற்றி கரிசனை கொள்ளுங்கள், எனக் கூறுகின்றனர். இந்தத் துர்வாடை காரணமாக பார்வையாளர்களுக்கு மத்தியிலும் சந்தனக் குச்சிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இத்தனை நடந்தும் இறந்த நாய் தொடர்ந்தும் அதே இடத்திலேயே கிடந்தது. அதனை அப்புறப் படுத்துவதற்கு எந்தவொருவரும் முட்படாதிருப்பது பற்றியே பைத்தியக்காரன் பார்வையாளர்களிடம் விசாரிக்கிறான்.

ஆசிரியர் :- ஆஹா அற்புதமான கதை இதில் பல்வேறு படிப்பினைகள் உள்ளன. படிப்பினைகளை எங்கே கூறுங்கள் பார்ப்போம்?

நிசார் :- எழுந்து நின்று, சமூகத்தில் பரவலாக காணப்படும் ஊழல்களையும் அநீதியான செயல்களையும் எடுத்துக் காட்டுவதற்கே இந்தக் கதை அமைந்துள்ளது. சமூகத்தில் உள்ள தீய பழக்கங்கள் குறித்தும் பொதுமக்கள் காட்டும் உதாசீனப் போக்கும் அவற்றை ஒழித்துக் கட்டும் செயற்பணியை மற்றையோர் மீது சுமத்தி பெரும்பாலானோர் தமது பொறுப்பிலிருந்து ஒதுங்கி பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்கு எடுத்துக் கொள்ளும் முயற்சியும் இங்கு அழகாக சொல்லப்படுகிறது. இன்றும் ஒருவரை ஒருவர் தூற்றுதல், வசைசொல்லுதல் சமூகத்தில் புல்லுருவிகளை முற்றாக ஒழித்துக் கட்டுவதற்கு நாம் அனைவரும் செயலாற்ற வேண்டி உள்ளது எனும் அம்சம் புலப்படுகிறது.

ஆசிரியர் :- எல்லோரும் உற்சாகமாக கைதட்டுங்கள் கைதட்டும் சத்தம் ஒலிக்கிறது. தொடர்ந்து ஆசிரியர் ரமா நீங்க என்ன தகவல் கொண்டுவந்திருக்கிறீங்க?

ரமா :- நான் எமது நாட்டு நிலைபற்றிய ஓர் அழகான சுவையூட்டும் சம்பவத்தைப்பற்றி தகவல் ஒன்றை எழுதியிருக்கின்றேன். அதாவது "சீத்துல்பவ்வ" எனும் வழிபாட்டுத் தலத்தை வணங்கிவழிபடுவதற்காகச் சென்ற யாத்திரிகர் குழுவொன்று ஆயுததாரிகளினால் சுற்றி வளைக்கப்பட்டு காட்டுக்குள் அழைத்துச் செல்லப்பட்டனர். அந்த யாத்திரிகர் குழுவிடமிருந்த சுமார் அறுபதாயிரம் ரூபா பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்ட திருடர்கள் யாத்திரிகர் குழுவிடம் இவ்வாறு தெரிவித்தனர். "மன்னிக்கவும் எமக்குத் தொழில் இல்லை அதன் காரணமாகவே நாம் உங்களிடம் கொள்ளையடிக்கிறோம்!" எனத் திருடர் கூட்டம் கூறியது.

ஆசிரியர் :- அடே பஞ்சதந்திரக் கதைகூட இப்படி இல்லை. தற்பொழுது தமது நாட்டில் உள்ள திருடர் கூட்டமும் இப்படித் -தான் இருக்கிறது. கத்தியால் குத்திக் கொலைசெய்துவிட்டு சடலத்தைநோக்கி "மன்னித்துக் கொள்ளுங்கள் இந்தக் கத்தியை நான் இப்பொழுதுதான் தீட்டினேன் அதனைக் குத்திப் பார்ப்பதற்கு என் அருகில் வாழைமரம் ஒன்று இருக்காததன் காரணமாகவே உங்களுக்குக் குத்திப் பார்த்தேன்"

என்று கூறும் அளவிலேயே உள்ளது. சரி நானும் பார்த்துக் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன். கார்த்திக் உம்முண்டு இருக்கிறாய். என்ன ஒரு தகவலும் கொண்டுவர இல்லையா?

கார்த்திக் :- கொண்டுவர ஒன்றும் இல்லையே சேர்.

ஆசிரியர் :- ஏனப்பா! உங்கட நண்பர்கள் அனைவரும் ரெடியா வந்திருக்காங்க நீங்க மட்டும் ஏன் ரெடியா வரல்ல?

கார்த்திக் :- அப்படி ஒன்றும் இல்லையே சேர். இலங்கை ஒரு நாடா? எங்குபார்த்தாலும் பாடல் ஒலிக்கிறது கார்த்திக் பாடுகிறார்

உலகெல்லாம் ஒருசொல் ஊழல்
ஒரு சொல்லில் உலகம் ஊழல்
கற்காலம் தொடங்கி கொம்பியூட்டர் வரைக்கும்
கற்காலம் தொடங்கி இன்ரெநெட் வரைக்கும்
ஊழல் ஊழல் ஊழல் ஊழல்.

கையடி கரகோசம் கேட்கின்றது.

எங்குபார்தாலும் இலஞ்சம், மோசடி, அதிகார துஸ்பிரயோகம், ஒப்புவிக்கப்பட்ட உடமையை மோசடியாக கையாளல், சட்டத்திற்கு புறம்பாக விலந்து பணம்புரங்குதல், முரண்பாட்டு அக்கறை, உள்ளக வர்தகம் முறைகேடாதல், பாராபட்சம், உறவுச்சலுகை எதிலும் மலிந்து காணப்படுகிறது. இதனால் நாட்டில் சமூக பொருளாதாரப்பிரச்சினை வறுமையால் பட்டினி கிடக்கும் நிலமை, மனித உரிமை மீறல், சமூக அநீதி, நாட்டின் அபிவிருத்திப் பின்னடைவு, பண்டங்களின் விலை உயர்வு போன்ற பாதக விளைவுகள் உள்ள நாட்டில் நான் வாழ்வதையிட்டு வெட்கப்படுகின்றேன். (உணர்ச்சிவசப்பட்டு கதைத்தல்).

ஆசிரியர் :- ஆமாம் இதெல்லாம் ஊழல் உள்ள நாட்டில் நடக்கும் அம்சங்கள்தான். ஆனால் இப்ப அதாவது 2014.01.08ம் திகதியில இருந்து அது மாற்றமடைந்திருக்கிறதே.

சயான் என்ற மாணவன் உடனே எழுந்து சேர் சேர் என அழைத்தல் ஆசிரியர் அவரை நோக்கி சயான் என்ன? என வினாவுதல்.

சயான் :- சேர் ௬௦ மாதங்களில் புதிய நாட்டை உருவாக்கும் ஐந்து அம்ச செயன்முறைகளில் இரண்டாவது ஊழல்களை வேருடன் களையும் செயன்முறை இருக்கிறதே. அதாவது, பொய், கள்ளம் கபடம் அற்ற ஒரு தேசம் எனும் மகுடத்தின் கீழ் சகல துறைகளையும் உள்ளடக்கக் கூடிய வகையில் ஊழலுக்கு எதிராகவும் இலஞ்சத்திற்கு எதிராகவும் சட்டங்களை அரசு அறிமுகம் செய்வதாகவும் இலஞ்ச ஆணையாளர் குழுவுக்குப் பதிலாக சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட ஊழலுக்கு எதிரான நடைமுறைக்கு ஏற்புடைய அதி சக்தி வாய்ந்த சுயாதீன ஊழல்களை ஒழிக்கும் ஆணைக்குழு ஒன்று ஸ்தாபிப்பதாகவும் ஹொங்கொங் நாட்டில் உள்ள ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவும் ஐக்கிய இராச்சியத்தின் பாரதூரமான மோசடிகளைப் புலனாய்வு செய்யும் பணியகமும் இவ்விடயத்தில் முன்னுதாரணமாக எடுத்துக் கொள்ளவும் தகவல் அறியும் சட்டம், தேசிய கணக்காய்வுச் சட்டம், குற்றச் செயல்மூலம் பெறப்படும் பணம் ~~பின~~ கையளிக்கப்படுதல் போன்ற விடயங்களை புதிய அரசாங்கம் முன்மொழிந்து நடைமுறைப்படுத்துகின்றது சேர்.

ஆசிரியர் :- நல்லது மாணவர்களே! இடைவேளைக்கு மணி அடிக்கிறது வெளியால் சென்று வாருங்கள்.

காட்சி - ௦௨.

(சற்று தாமதித்து வகுப்பறை மீண்டும் கூடுகிறது).

மாணவர்கள் வருகை.

ஆசிரியர் வருகை.

ஆசிரியர் :- சரி மாணவர்களே நல்ல நல்ல விடயங்களை பார்த்தோம் தற்பொழுது உங்களுடைய எதிர்கால இலட்சியம் என்ன?

கார்த்திக் :- சேர் எனக்குப் பொலிஸ் பொறுப்பதிகாரியாகவரவேண்டும் என்ற ஆச சேர்.

ஆசிரியர் :- ஆ ஏன் கார்த்திக்.

கார்த்திக் :- சேர் முந்தநாள் இரவு 7 மணி இருக்கும் ஒரு பரதான வீதியில்லாத ஒரு கிராமப்பகுதியால போறன் சனக் கூட்டம் நிக்கிறது. என்ன என்று ஒரு முதியவரிடம் விசாரித்தேன் முதியவர் அளித்தபதில் "அவங்க பொலிஸ் காரங்க அவங்களுட்ட பணம் தட்டுப்பாடாம் இங்க வந்து தலைக்கவசம் இல்லாதவங்களைப் பிடித்தா காசு கொடுப்பாக அதை வாங்கிக்கி பக்கட்டு நிரம்பும் வரப் பிடிப்பாக பக்கட்டு நிரம்பினா போயிடுவாக இதான் பொலிசிக் காரண்ட தொழில்." என்றார் இவ்வாறான பிழையான வேலையை அகற்றி பரதேசம் தோறும் இலஞ்ச ஊழல் இல்லாத ஒரு பொலிஸ் சமூகத்தை உருவாக்க எனக்கு ஒரு ஆச.

ஆசிரியர் :- அப்படியே ஆகட்டும் உங்கள் ஆச நிறைவேற வாழ்த்துக்கள். அமீர் உங்களுடைய எதிர்காலம் என்ன?

அமீர் :- சேர் நான் ஒரு பாடசாலை அதிபராக வரவேண்டும் ஏனென்றா என்னுடன் படித்த மாணவன் ஒருவன் நான் இருக்கும் பாடசாலையில் இல்லாம வேறொரு பாடசாலையால உயர்தரம் படிக்க சேர்ந்திருக்கிறான் அங்கு சேர்வதற்கு 2000 ரூபா இலஞ்சப்பணம் கொடுத்தா முன்னுரிமை கிடைக்குமாம். என்று சொன்னார் சேர். எதிர்கால சமுதாயத்தை உருவாக்கும் ஓர் இடத்திலும் இப்படியொரு மோசமான நிலையா? எனவே நான் ஒரு அதிபராக இருந்து ஊழல் இல்லாத சிறந்த சமுதாயத்தையும் சிறந்த நாட்டையும் உருவாக்க நான் பாடுபட போறன் சேர்.

ஆசிரியர் :- உங்கட எதிர்காலம் சிறப்பாக அமைய நான் இறைவனிடம் பிரார்த்திக்கின்றேன். சரி மீனா உங்களுடைய எதிர்கால இலட்சியம் என்ன?

மீனா :- சேர் நான் ஒரு கிராம அதிகாரியாக வர வேண்டும். சேர் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தின் போது எங்கட ஏரியா GS எல்லோரையும் பாதிக்கப்பட்டவர்களாகப் பதிந்து அதற்குரிய நிதிகளைப் பெற்று அனைவரிடமிருந்தும் 2500 ரூபாய் வாங்கிட்டுதான் மீதிப் பணத்த கொடுத்தாரு இந்த சம்பவம் என்னை பாதித்து விட்டது. அதனால கிராம மட்டங்களில் இருந்து ஊழலற்ற சமுதாயத்தை உருவாக்க வேண்டும்.

"என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் - ஏன்
கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்"
என்று பாடி முடித்தல்.

முகுந்தன் :- சேர் சேர் எனக்கு ஓர் அறிவிப்பாளராக ஆசை சேர் நான் ஊடகங்களில் தோன்றி நாட்டில் இலஞ்ச ஊழலில் ஈடுபடுபவர்களை அம்பலப்படுத்தி அவர்களை சமூகத்தில் இருந்து ஒதுக்கி இலஞ்ச ஊழல் இல்லாமல் வளமான ஓர் இலங்கையை உருவாக்குவது எனது எதிர்கால இலட்சியம்.

ஆசிரியர் :- உங்களுடைய எதிர்கால இலட்சியத்தைப் பாராட்டுகிறேன். உண்மையிலேயே எமது நாடு செல்வமான தேசமாகும். நீங்கள் ஒவ்வொருவரும் மாறினால் நாடு மாறும் என்பதும் விடயங்களை மனதிற்கொண்டு பாடுபட்டால் எமது நாட்டில் இருந்து இலஞ்ச ஊழல் இல்லாது போக்கலாம். ஊழல் எம் மத்தியிலிருந்து ஒழித்துக் கட்டப்படாதிருப்பது ஏன்?

மாணவர்கள் ஒவ்வொருவராக பதில் கூறல்.

சமீர் :- பொருளாதாரக் காரணிகள்.
* வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காமை.
* ஆற்றும் சேவைக்கு ஏற்ற ஊதியம் கிடைக்காமை.
* வருமான ஏற்றத்தாழ்வு.

இர்பான் :- அரசியல் ரீதியான காரணங்கள்.
* சில அரசியல் வாதிகளின் பேராசை

சுரேஸ் :- நிருவாக ரீதியான காரணிகள்.

மீரா :- சட்ட ரீதியான காரணிகள்.

கல்பனா :- சமூக ரீதியான காரணிகள்.
* ஒருவருக்கொருவர் பொறாமை, போட்டியுடன் வாழ்தல்.
* விட்டுக் கொடுப்பு இன்மை.

காட்சி -03.

(பல வருடங்களுக்குப் பிறகு).

ஆசிரியர் :- வயதான காலத்துல கண்ணும் புகைச்சுப்போச்சு ஆனா கையில பணம் இருக்கு, நிம்மதி இருக்கு வெளிநாட்டவங்க இங்க வாறாங்க ஏதோ நாடு நல்லா இருக்கிற மாதிரி.
இருமல். . . . . ஹ, ஹ, ஹ

பழைய மாணவர் சங்க நிகழ்வில் ஒன்று கூடல்.

கார்த்திக் :- சேர், சேர் . . . .

ஆசிரியர் :- யாரப்பா நீ . . .

கார்த்திக் :- நான் தான் சேர் கார்த்திக்.

ஆசிரியர் :- கார்த்திக் என்றா யாரு தம்பி.

கார்த்திக் :- சேர் நான் உங்கட மாணவன் சேர் நான் இப்ப பொலிஸ் மா அதிகாரியாக சேவையாற்றி வருகின்றேன் சேர். எமது தாய் நாட்டில இருந்து இலஞ்ச ஊழலற்ற ஒரு சேவையை செய்யும் பணியில இருக்கன் சேர். சர்வதேச ரீதியாக இலஞ்ச ஊழலை ஒழித்தமையை இட்டு என்னைப் பாராட்டி விருதும் கிடைச்சிருக்கு சேர். நான் மாறினா நாடு மாறும் என்ற உண்மை இன்று எமது நாட்டில நடக்குது சேர் எல்லாத்துக்கும் நீங்கள் மூல காரணம் சேர் என சந்தோஷத்துடன் ஆரவாரப்படல்.

முகுந்தன் :- சேர் நான் முகுந்தன் நான் ஓர் ஊடகவியலாளராக இருக்கிறேன் சேர் "புதுயுகம்" பத்திரிகையாசிரியராக இருந்து இலஞ்ச ஊழலுக்கு எதிராகப் போராடி அண்மையில் எனக்கு "தங்க பேனா" என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டது சேர். எமது நாட்டில மோசமாக செயற்பட்ட மோசடிக் -காரர்களை அம்பலப்படுத்தி அவர்களிடம் இருந்து எமது நாட்டை பாதுகாத்து செழிப்பான யுகம் ஒன்று இப்போது ஏற்பட்டிருக்கிறது சேர். அனைத்திற்கும் உங்களுடைய ஆசீர்வாதமே காரணம் சேர். நன்றி சேர்.

அமீர் :- நான் தேசிய கல்வி நிறுவனத்தில் கலைத்திட்ட ஆலோசகப் பொறுப்பாக இருந்து எமது நாட்டுப் பாடத்தில் இலஞ்ச ஊழல் ஒழிப்புக்கான விழிப்புணர்வை பாடத்திட்டங்களில் உருவாக்கி இன்று இலஞ்ச ஊழல் அற்ற ஒரு சிறந்த சமுதாயத்தைக் கண்டு கொள்ளும் அமைப்புக்கு மக்களை மாற்றியுள்ளேன் சேர் நான் மாறினா நாடுமாறும் என்னும் உண்மை இப்போது தெரியுது சேர்.

மீனா :- சேர் நான் மாவட்ட அரசாங்க அதிபராக சேவையாற்றுகிறேன் சேர். கிராமமட்டத்தில் உள்ள குற்றச் செயல்களை ஒழிக்க கடுமையான நடவடிக்கை எடுத்திருக்கிறேன் சேர். சென்ற மாதம் இரண்டு GS களை குற்றம் செய்தமைக்காக வேலையால் இருந்து நிறுத்திவைத்துள்ளேன். நான் மாறினா நாடு மாறும் என்ற உண்மையை எல்லாக் கிராமங்களுக்கும் சென்று சேர்க்கும் பணியினை சரிவர நிறைவேற்றுகிறேன் சேர்.

ஆசிரியர் :- நீங்கள் அனைவரும் எனது மாணவர்கள் என்பதை எண்ணி நான் பெருமைப்படுகிறேன். (அக மகிழ்ச்சியுடன்).

ஆசிரியருக்கு கௌரவம் வழங்கப்படுகின்றது.
எல்லா மாணவர்களும் கைகோர்த்து நாங்கள் மாறிவிட்டோம் எங்களுடைய நாடும் மாறிவிட்டது என கூட்டாக ஒலித்தல்.
"நான் மாறினால் நாடுமாறும்"